# குட்டி அமையா



”அமாயாவின் கதை” ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடனும், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (UNDP) மற்றும் யூனிசெப் இலங்கை (UNICEF Sri Lanka) ஆகியவற்றுடனும் இணைந்து நீதி அமைச்சகத்தின் மூலம் செயல்படுத்தப்பட்ட நீதிக்கான துறையை ஆதரிக்கும் திட்டத்தின (JURE) கீழ் தயாரிக்கப்பட்டது. இந்த நூலில் முன்வைக்கப்பட்டுள்ள ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் சாசனத்தின் (UNCRC) சரத்துக்கள் அதன் அசல் அர்த்தத்தைப் பாதுகாக்கும் நோக்கில் மிக அதிக கவனத்துடனும் துல்லியத்துடனும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அவசியமான இடங்களில், தெளிவான புரிதலுக்கு உதவுவதற்காகவும், சிறுவர் உரிமைக் கருத்துக்களை வாசகர்கள் இலகுவாக அணுகுவதற்காவும், தெளிவுபடுத்தப்பட்டு சரத்துக்கள் எளிமையாக்கப்பட்டுள்ளன. மேலும் மூல சாசனத்தின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், இந்த மொழிபெயர்ப்புகளும் விளக்கங்களும் கல்வி மற்றும் தகவல் நோக்கங்களுக்காக மாத்திரமே ஆகும் . இவை UNCRC இன் உத்தியோகபூர்வ அல்லது சட்டரீதியான மொழிபெயர்ப்பின் விளக்கமாகக் கருதப்படக்கூடாது.

# குட்டி அமாயா



பெற்றோர்கள் மட்டுமல்லாமல், குழந்தைகளுடன் பணிபுரிவோர் அல்லது குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பில் உள்ள எந்தவொரு பெரியவரும் இந்தப் புத்தகத்தில் உள்ள சிறுவர் உரிமைகளை வாசித்துப் புரிந்துகொள்ள வேண்டும். அத்துடன் இந்த உரிமைகளை குழந்தைகளுக்கும் விளக்கிக் கூற வேண்டும்.

இதோ இவள்தான் குட்டி அமாயா.
ஒரு நாள் அவள் தோட்டத்தின் கீழ் பகுதிக்கு நடந்து சென்றாள்.
தோட்டத்தின் கீழ் இருக்கும் சிறிய ஓடைக்கு அருகே விளையாட அமயாவுக்கு மிகவும் பிடிக்கும்.
அவள் அன்பாக வளர்க்கும் பூனைக்குட்டி சுசீயும்,
நாய்க்குட்டி ஷாவியும் இந்த நேரத்தில் அங்கேதான் இருக்கும்.

சுசீ... அமாயா அழைத்தாள்.





“ஏன்?, ஏன்?! நான் இங்கு தான் இருக்கிறேன்.”

அந்த சத்தத்தால் குட்டி அமயா திடுக்கிட்டாள்.
சுசீ பேசினாளா? சுசீ ஒருபோதும் குட்டி அமயாவுடன் பேசியதில்லை. “மியாவ்” என்று மட்டுமே சத்தமிடும்.

“ஆம், என்னால் பேச முடியும். பேசுவது என்னுடைய உரிமை,” என்று சுசீ  குட்டி அமயாவிடம் கூறியது

“உரிமையா? அது என்ன? உனக்கு ஏன் அப்படி ஒரு உரிமை?”

”என் பாதுகாப்பிற்காக. என் நன்மைக்காக. ஒருவருக்கு உரிமைகள் இருப்பது அதற்காகத்தானே,” என்று சுசீ கூறியது.

குட்டி அமாயாவுக்கு மிகவும் ஆச்சரியம்.
சுசீ பேசுறது மட்டுமல்லாமல்,

அவளுக்குத் தெரிந்த விஷயங்கள் பற்றி...



“குட்டி அமாயா உனக்குத் தெரியுமா?
நீ ஒரு சிறுமியென்று.”

“சிறுமியா?” அமாயா ஆச்சரியத்துடன் கேட்டாள்.

“ஆம், பதினெட்டு வயதுக்கு குறைவாக இருந்தால், நீ ஒரு சிறுமிதான்.ஒரு பிள்ளையுடைய பாதுகாப்பிற்காக சிறுவர் உரிமைகள் இருக்கின்றன..”

“ஆ... எனக்கும் அப்படியானவை இருக்கின்றனவா?”

சுசீயின் கதையைக் கேட்டதும் அமயா மிகவும் மகிழ்ச்சியடைந்தாள்.
எனவே அமயா பாட ஆரம்பித்தாள்


சுசீ சுசீ சொல்லு
என் உரிமைகளை
எனக்குச் சொல்லு
சீக்கிரம் சொல்லு
"பதிலுக்கு சுசீயும் பாட்டினாலே
பதிலளிக்க ஆரம்பித்தது...
உனக்குப் பிடித்ததைக் கற்றுக் கொள்ள
சந்தோஷமாய் குடும்பத்துடன் இருக்க
தொந்தரவுகள் துன்பங்கள் இல்லாமல்
இருக்க பத்திரமாகப் பெரியவளாக வளர
உனக்கு உரிமை இருக்கிறது"
அமாயா இப்போது தெரிந்துகொண்டாள்.

குட்டி அமாயா சுசீயுடன் பாட்டு பாடுவதை பார்த்து, ஷாவி அங்கு ஓடி வருகிறது.
“ஆ... குட்டி அமாயா...”
ஷாவி பேசுவதை கண்டதும், குட்டி அமாயா இன்னும் அதிர்ந்து போனாள்.

“உன்னாலும் முடியுமா...?”

“ஆமாம்... நாங்கள் எல்லோரும் பேசுவோம். சிறுவர்களுக்கு மட்டும் கேட்கும் படி. அப்படியானால், நான் உன்னுடன் சேர்ந்து பாடட்டுமா?” என்று ஷாவி கேட்டது.



“நீயும் என்னுடன் பேசவில்லையே. அதனால் உன்னை நான் பாட்டுப் பாட சேர்க்கமாட்டேன்.”

“ஆ... அப்படிச் செய்ய முடியாது... சமமாக நடத்தப்படுவதற்கு ஒவ்வொரு பிள்ளைக்கும் உரிமை இருக்கிறது அல்லவா...”

“என்னது, இவனுக்கும் உரிமைகள் பற்றி தெரியுமா??”
அமாயா ஆச்சரியத்துடன் கேட்டாள்.





"ஷாவி ஷாவி நீ சொல்லு
என் உரிமைகளை எனக்கு சொல்லு
ஷாவி, நீ என்மீது அன்பு வைத்திருந்தால்
எல்லாவற்றையும் எனக்கு விளக்கிச் சொல்லு"



ஷாவியும் பாட்டிலேயே பதில் சொல்ல ஆரம்பித்தது

"மனதில் தோன்றும் கருத்தைச் சொல்ல,புதிய
விஷயங்களைச் சிந்திக்க, தகவல் அறிய,
தீயவற்றிலிருந்து  இருந்து விலகி,அன்பான
பெற்றோர் அரவணைப்பைப் பெற

உனக்கு உரிமை உண்டு! அமாயா
இப்போது அறிந்து கொண்டாள்"

இதோ! அன்றாடம் தோட்டத்திற்கு
வரும் அழகிய வண்ணத்துப் பூச்சி,
சரியாக அதே சமயம் அங்கு வந்து சேர்ந்தது.

“இதுவும் பேசுமா?”
வரும்போது குட்டி அமாயா கேட்டாள்.

“என் பெயர் ரோஸி. நாங்கள் எல்லோரும்
பேசுவோம். ஆனால்,
அது சிறுவர்களுக்கு மட்டுமே கேட்கும்.
என்று சொல்லி ரோஸி பாட ஆரம்பித்தது.”



“உண்ண, அருந்த, பெரியவளாக
வளர சந்தோஷமாய் விளையாட
சுதந்திரத்தை அனுபவித்து வளர
இலகுவாகச் சிறகடிக்க

உனக்கு உரிமை இருக்கிறது “அமாயா”
இப்போது தெரிந்துகொண்டாள்.





குட்டி  அமயா மிகவும் ஆச்சரியப்படுகிறாள். இது ஒரு கனவா என்று கூட அவள் யோசிக்கிறாள். அதனால்தான் அவள் விரைவாக வீட்டிற்குச் சென்று இதைப் பற்றி தன் அம்மாவிடம் சொல்ல விரும்புகிறாள்.

“நான் இப்போது வீடு செல்ல வேண்டும். அம்மாவிடம் இந்த உரிமைகளைப் பற்றிக் சொல்ல  வேண்டும்.”



அவள் வீட்டை நோக்கி ஓடினாள். அவளின் பின்னால் சுசீயும், ஜாவியும், ரோஸியும் வீட்டுக்கு அருகாமை வரை சென்றனர்.


குட்டி அமாயா நேராக அம்மாவிடம் ஓடிச் சென்றாள். அம்மா சமையலறையில் உணவு சமைத்துக் கொண்டிருந்தாள்.
“அம்மா! அம்மா! எனக்கு உரிமைகள் உண்டா?”


”ஆமாம்! என் மகளுக்கு மட்டுமல்ல, ஒவ்வொரு பிள்ளைக்கும் உரிமைகள் இருக்கின்றன. அவை சின்னப் பிள்ளைகளின் பாதுகாப்புக்காகவும், ஒரு நல்லப் பிரஜையாக வளர்வதற்காகவும் தான் இருக்கின்றன,” என்று அம்மா சொன்னாள்.




“அம்மா, நான் அந்த உரிமைகளை எப்படித் தெரிந்துகொள்வது? எனக்குச் சொல்லித் தாருங்கள்...”

“நாம் ஒரு விளையாட்டு விளையாடலாம். நான் வெவ்வேறு இடங்களில் உன் உரிமைகளை எழுதி மறைத்து வைத்திருக்கிறேன். அவற்றைக் கண்டுபிடித்துத் தெரிந்துகொண்டால், உனக்கு ஒரு கதைப் புத்தகம் பரிசாகத் தருகிறேன்.”



குட்டி அமாயாவுக்கு விளையாட மிகவும் ஆசை. அதேபோல், கதைப் புத்தகங்கள் படிக்கவும் அவளுக்கு ஆசை. அதனால், அவள் சுசீ, ஷாவி, மற்றும் ரோஸியுடன் சேர்ந்து உரிமைகளை தேடி சேகரிக்க ஆரம்பித்தாள்.


"சிறுவர்கள் தொடர்பான தீர்மானங்களில், சிறுவர்களின் நலனே முதன்மையானது."
"அப்பிடியா! பிள்ளைகள் சம்பந்தமான எந்தவொரு முடிவை எடுக்கும்போதும், அது அவர்களுக்கு நல்லதா கெட்டதா என்றுதான் முதலில் யோசிக்க வேண்டும் என்று இது கூறுகிறது."


புத்தக மேசை மேல்
“கற்றல் என்பது
சிறுவர்களின் உரிமை”
“உனக்கு விருப்பமான ஒன்றைக் கற்றுக்கொள்வதும்,
நீ கற்கும் விடயத்தின் மூலம் உன் திறமைகளை
வளர்த்துக்கொள்வதும் உனது உரிமை என்றுதான் இது
கூறுகிறது,”
என்று ஜாவி அமாயாவிடம் விளக்கிக் கூறியது.




"அமாயா, நீ பயப்படாமல் உனக்குத் தோன்றுவதைச் சொல்ல வேண்டும்... அதற்கு உனக்குச் சுதந்திரம் இருக்கிறது," சுசீ கூறியது.

# ‘வன்முறையிலிருந்து பாதுகாப்புப் பெறுவது சிறுவர்களின் உரிமை’

“தொந்தரவு கொடுக்கவோ, துன்புறுத்தவோ யாருக்கும் உரிமை இல்லை, சரியா?” என்று ரோஸி உறுதியாகக் கூறியது..



# சாமந்தி பூ பாத்தியில்


“அங்கவீனமுற்றவராயின்
விசேட வசதிகளை பெறும்
உரிமை”
”அவர்களும் நம்மைப் போலவே சுதந்திரமாக,
தமக்கு விருப்பமானதைக் கற்றுக்கொண்டு,
விருப்பமான விதத்தில் வாழ வேண்டும்.
அவ்வாறு அவர்கள் வாழ்வதற்கு நாம் உதவ வேண்டும்.”



# பெற்றோரின் அரவணைப்பு ஒரு குழந்தையின் உரிமை.

ஷாவி – “சரியாகச் சொன்னாய். அம்மாவும் அப்பாவும் ஒரு குழந்தையை நன்றாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்.”

”அதுபோலவே, நீ நோய்வாய்ப்பட்டால் மருந்து பெறுவதற்கும், உடுத்த ஆடை, பாதுகாப்பாக இருக்க வீடு...

உண்பதற்குச் சத்தான உணவு, குடிப்பதற்குச் சுத்தமான தண்ணீர் ஆகியவற்றைப் பெறுவதற்கும் சிறுவர்களுக்கு உரிமை உண்டு...” ஷாவியின் பேச்சுக்கு இடையில் புகுந்த சுசீ, மேலும் ஒரு பட்டியலையே சொல்லிச் சென்றது.


சரியாக அப்பொழுது அம்மா வெளியே வந்தாள். அம்மா வந்து, குட்டி அமாயாவை அன்புடன் அணைத்துக்கொண்டாள்.
“இப்போது நீ சிறுவர்களின் உரிமைகள் பற்றி நிறைய தெரிந்துகொண்டாய் அல்லவா. அவை உனது பாதுகாப்புக்காக நீ தெரிந்துகொள்ள வேண்டியவை. பிள்ளைகளுக்கு இன்னும் பல உரிமைகள் உள்ளன. அவற்றையும் நீ தெரிந்துகொள்ள வேண்டும்,” என்று அம்மா அமாயாவிடம் அன்புடன் சொன்னாள்.
“நான் மற்றவர்களுக்கும் சொல்லிக் கொடுக்க வேண்டும்!”
“சரி, சரி, இன்னும் ஒரு விடயம் நீ தெரிந்துகொள்ள வேண்டியது இருக்கிறது” அம்மா அமாயாவை இடைமறித்தாள். உனக்கு உரிமைகள் இருப்பது போலவே, மற்றவர்களுக்கும் உரிமைகள் உள்ளன’ என்று அம்மா விளக்கிக் கொடுத்தாள்.



“ஆ?” அமயா யோசிக்க ஆரம்பித்தாள்.

ஷாவி – ”ஆம் அமாயா.
அதனால் மற்றவர்களுக்கு
அன்பையும் மரியாதையையும் கொடு.”

ரோசி – “உன்னால் முடிந்தவரை
சிறந்தவளாக இரு.”
என்று ரோஸியும் விளக்கிக் கொடுத்தாள்.

சுசீ – ”மற்றவர்கள் சொல்வதையும் கேட்க பழகிக்கொள்.
ஆனால், நீ கேட்கும் விடயங்களில் உனது நலனுக்குச்
சிறந்ததை மாத்திரம் தான் எடுத்துக்கொள்ள வேண்டும்.”
சுசீ அமாயாவின் காதுக்கு அருகே வந்து சொன்னாள்.



”உனது உரிமைகளை நன்கு தெரிந்துகொண்டிருப்பது
போலவே, மற்றவர்களின் உரிமைகளும் பாதுகாக்கப்படும் விதத்தில்
நீ செயல்பட்டால் தான், நீயே சிறந்த அமாயாவாக ஆகிறாய்.”



அம்மா அமாயாவுக்கு கதைப் புத்தகத்தைப் பரிசளித்தாள்.
அமாயா மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள்.

அதனால், அமாயா இந்தக் கதைப் புத்தகத்தை உங்களைப் போன்ற சிறுவர்கள் அனைவருடனும் பகிர்ந்துகொள்ள தீர்மானித்தாள். நீங்கள் இப்போது வாசிப்பது அந்தப் புத்தகத்தைத்தான்.



# உங்களுக்கு இருக்கும் இந்த உரிமைகள் பற்றி உங்களுக்குத் தெரியுமா?

### 01 சிறுவர்கள் என்றால் யார்?

பதினெட்டு வயதுக்குக் குறைவான எவரும் சிறுவர்கள் ஆவார்.

### 02 சமமாக நடத்தப்படுதல்.

இதன் பொருள் எந்தவொரு சிறுவனும் சிறுமியும் அவர்கள் யாராக இருந்தாலும், எங்கு வாழ்ந்தாலும், எந்த மொழி பேசினாலும், எந்த மதத்தை பின்பற்றினாலும், எதைச் சிந்தித்தாலும, வெளியே எப்படித் தோன்றினாலும், சிறுவனாக இருந்தாலும், சிறுமியாக இருந்தாலும், மாற்றுத்திறனாளி சிறுவராக இருந்தாலும், ஏழையாக இருந்தாலும், பணக்காரராக இருந்தாலும், பெற்றோர்/ குடும்பம் யாராக இருந்தாலும், பெற்றோர்கள் அல்லது குடும்ப உறுப்பினர்கள் எதை நம்பினாலும், செய்தாலும், எந்தக் காரணத்திற்காகவும் வித்தியாசமாக நடத்தப்பட முடியாது.



### 03 நலனுக்கு முன்னுரிமை

பெரியவர்கள் உங்களைப் பற்றி மட்டுமல்லாமல், வேறு எந்தக் குழந்தைகள் பற்றியும் முடிவெடுக்கும்போதும், அது உங்களைப் எவ்வாறு பாதிக்கும் என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும். உங்களது அதிகபட்ச நலனுக்காக அவர்கள் செயல்பட வேண்டும். பிள்ளைகள் அவர்களது பெற்றோர் மூலமாகவோ அல்லது அவர்கள் இல்லாதபட்சத்தில், வேறு பொறுப்புள்ள பெரியவர் மூலமாகவோ பராமரிக்கப்படுவதை ஒவ்வொரு நாட்டு அரசாங்கமும் உறுதி செய்ய வேண்டும். அதேபோல், பெற்றோருக்குப் பதிலாக சிறுவர்களை பராமரிக்கும் இடங்கள்/தமது வீட்டிற்கு வெளியே சிறுவர்கள் தங்கவைக்கப்படும் இடங்கள் – உதாரணம்: பாடசாலைகள், வைத்தியசாலைகள், சிறுவர் இல்லங்கள், பகல் நேரப் பராமரிப்பு நிலையங்கள் [daycare] – அந்தப் சிறுவர்களை சிறப்பாகவும், நன்றாகவும், பாதுகாப்பாகவும் பார்த்துக்கொள்கின்றனவா என்பதைக் குறித்து எப்போதும் ஆராய வேண்டும்.

### 04 சிறுவர்களுக்கான உரிமைகளை நடைமுறைப்படுத்துதல்

ஒவ்வொரு நாட்டிலும் உள்ள ஒவ்வொரு சிறுவர்களும் தங்கள் அனைத்து உரிமைகளையும் அனுபவிக்க முடியும் என்பதை உறுதி செய்யும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது.

### 05 குடும்ப வழிகாட்டுதல்

அரசாங்கமானது, குடும்பங்கள் மற்றும் சமூகங்கள் தங்கள் குழந்தைகளை வழிநடத்த அனுமதிக்க வேண்டும். இந்த வழியில், குழந்தைகள் வளரும்போது தங்கள் உரிமைகளை நன்கு பயன்படுத்தக் கற்றுக்கொள்வார்கள். அவர்கள் வளர்ந்த பின்னர் குறைவான வழிகாட்டுதலே தேவைப்படுகிறது.

### 06 வாழ்வு, இருப்பு மற்றும் வளர்ச்சி

ஒவ்வொரு சிறுவர்களுக்கும் வாழ்வதற்கான உரிமை உண்டு. சிறுவர்கள் சிறப்பாக வாழக்கூடிய ஒரு நாட்டையும், சூழலையும் உருவாக்குவது ஒவ்வொரு அரசாங்கத்தினதும் பொறுப்பாகும்.

### 07 பெயர் மற்றும் குடியுரிமை

ஒரு குழந்தை பிறந்தவுடன் பதிவு செய்யப்பட வேண்டும். மேலும், அரசாங்கத்தால் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு பெயரை அக்குழந்தைக்கு வழங்க வேண்டும். குழந்தைகளுக்கு ஒரு தேசியம் (ஒரு நாட்டிற்கு சொந்தமான) இருக்க வேண்டும். குழந்தைகள் எப்போதும் தங்கள் பெற்றோரைப் பற்றி அறிந்திருக்க வேண்டும், அவர்களின் பராமரிப்பைப் பெற்று கொள்ள  வேண்டும்.

### 08 அடையாளம்

சிறுவர்களுக்குத் தங்கள் சொந்த அடையாளத்திற்கான உரிமை உண்டு. ஒவ்வொரு சிறுவருக்கும் அவர்களின் பெயர், தேசியம் மற்றும் குடும்ப உறவுகள் பற்றிய தகவல் அடங்கிய ஒரு ஆவணம் (உதாரணமாக: பிறப்புச் சான்றிதழ்) இருக்க வேண்டும். இதை ஒரு பிள்ளையிடமிருந்து யாரும் பறிக்க முடியாது. ஆனால் அது நடந்தால், ஒவ்வொரு அரசாங்கமும் அந்த பிள்ளை விரைவில் அதை மீட்டெடுக்க உதவ வேண்டும்.

### 09 குடும்பத்துடன் வாழ்வதற்கான உரிமை

குழந்தையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என்றால், பெற்றோரிடமிருந்து குழந்தைளைப் பிரிக்கக் கூடாது. உதாரணம்: பெற்றோர் ஒருவர் குழந்தையைத் துன்புறுத்தினால் அல்லது பராமரிக்காவிட்டால். பெற்றோரில் ஒருவருடன் மட்டும் வாழும் குழந்தைக்கு, அதன் பாதுகாப்புக்கு இடையூறு இல்லை என்றால், தன்னுடன் வாழாத தாயுடனோ அல்லது தந்தையுடனோ தொடர்புகளைப் பேணுவதற்கு உரிமை உண்டு.



### 10 வேறு நாட்டில் வாழும் பெற்றோருடன் தொடர்பு கொள்ளுதல்

ஒரு குழந்தை தனது தாய் அல்லது தந்தை இருக்கும் நாட்டில் வாழவில்லை என்றால், அந்தக் குழந்தை தனது தாய் தந்தை அல்லது பெற்றோரிடம் செல்லவும், தொடர்பு கொள்ளவும் உரிமை உண்டு.

### 11 கடத்தல்களில் இருந்து பாதுகாப்பு

சட்டத்தின் அனுமதியின்றி, ஒரு பிள்ளை வாழும் நாட்டிலிருந்து வெளிநாட்டிற்கு அழைத்துச் செல்வதைத் தடுப்பதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
உதாரணம்: பெற்றோர் பிரிந்து வாழும் பட்சத்தில், ஒருவரின் அனுமதியின்றி மற்றைய பெற்றோர் பிள்ளையை நாட்டைவிட்டு வெளியேற்றுவதோ அல்லது வேறொரு நாட்டில் தடுத்து வைத்திருப்பதோ கூடாது.

### 12 சிறுவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல்

தங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விஷயங்கள் குறித்துத் தங்களுக்குத் தோன்றுவதை சுதந்திரமாகச் கூறுவதற்கு சிறுவர்களுக்கு உரிமை உண்டு. பெரியவர்கள் இந்தக் கருத்துக்களைக் கேட்டு அது தொடர்பாக பரிசீலனை செய்ய வேண்டும்.

### 13 சுதந்திரமாக கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளுதல்

மற்றவர்களுக்குத் தொந்தரவு அற்ற வகையில், வரைவது அல்லது எழுதுவதன் மூலமோ மற்றவருக்கு கூறுவதற்கு அல்லது வேறு எந்த விதத்திலாவது சிறுவர்கள் தங்கள் கருத்துக்களைச் வெளிப்படுத்த உரிமை உண்டு.

### 14 சிந்தனை மற்றும் மத சுதந்திரம்

மற்றவர்களின் உரிமைகளுக்குத் தீங்கு விளைவிக்காத வகையில் – சிறுவர்களுக்குத் தாம் விரும்பும் மதத்தை, விரும்பும் விதத்தில் கடைப்பிடிக்க உரிமை உண்டு. இது குறித்து பிள்ளைகளுக்கு வழிகாட்டுவது பெற்றோரின் பொறுப்பாகும். இதன் மூலம், பிள்ளைகள் இந்த உரிமையைச் சரியாகப் பயன்படுத்தக் கற்றுக்கொள்கின்றார்கள்.

### 15 குழுக்களை அமைத்தல் அல்லது இணைதல்

மற்றவர்களுக்குத் தீங்கு ஏற்படாத வகையில், சிறுவர்களுக்கு குழுக்களிலோ அல்லது அமைப்புக்களிலோ இணைந்துகொள்ள, அல்லது அத்தகைய குழுக்களை உருவாக்குவதற்கு உரிமை உண்டு.

### 16 தனிப்பட்ட வாழ்வை பாதுகாத்தல்

ஒவ்வொரு சிறுவருக்கும் தனிப்பட்ட வாழ்வை வாழ்வதற்கு உரிமை உண்டு. நாட்டின் சட்டம் சிறுவர்களுக்கு இந்த உரிமையை உறுதி செய்ய வேண்டும். உதாரணம்: ஒரு பிள்ளைக்கு ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால், அதைச் செய்திகளில் அறிக்கையிடும்போது, அந்த பிள்ளையினதும் அதன் குடும்பத்தினதும் தனிப்பட்ட வாழ்வுக்கு தீங்கு ஏற்படாத வகையில் அறிக்கையிட வேண்டும்.

### 17 தகவல்களைப் பெறும் உரிமை

சிறுவர்களுக்கு இணையம், வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள், புத்தகங்கள் மற்றும் வேறு எந்த வழிகள் மூலமாகவும் தகவல்களைப் பெறும் உரிமை உண்டு. ஆனால், சிறுவர்கள் பெற்று கொள்ளும் அந்தத் தகவல்கள் தீங்கு விளைவிக்காதவை என்பதை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு பெரியவர்களுக்கு உண்டு.

ஊடகங்கள், சிறுவர்களுக்குப் புரியும் விதத்தில், சிறுவர்களின் நலனுக்குத் தேவையான தகவல்களைப் பகிர வேண்டும். அதேபோல், இதைச் சரியாக செய்வதற்காக ஊடகங்களை ஊக்குவிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது.



### 18 பெற்றோர்களின் கடமை

ஒரு குழந்தையை சிறந்த முறையில் வளர்ப்பது பெற்றோர்கள் இருவரின் கடமையாகும். பெற்றோர் இல்லாத பட்சத்தில் அந்தப் பொறுப்பு, பொறுப்புள்ள ஒரு பெரியவர் அல்லது ஒரு பாதுகாவலரிடம் ஒப்படைக்கப்படும்.
பெற்றோர்களும் பாதுகாவலர்களும் எப்போதும் குழந்தையின் அதிகபட்ச நலனைக் கருத்தில் கொள்ள வேண்டும். அதற்காக அரசாங்கம் அவர்களுக்கு உதவ வேண்டும். ஒரு குழந்தைக்குப் பெற்றோர்கள் இருவரும் இருந்தால், அந்தக் குழந்தை குறித்து எடுக்கப்படும் அனைத்து முடிவுகளுக்கும் அவர்கள் இருவரும் பொறுப்பேற்க வேண்டும்.

### 19 வன்முறையிலிருந்து பாதுகாப்பு

அரசாங்கமானது சிறுவர்களுக்கெதிரான வன்முறை, துஷ்பிரயோகம் ஆகியவற்றுடன் அவர்களைப் பராமரிக்கும் எவரேனும் ஒருவர் மூலமாக கவனிக்கப்படாமல் புறக்கணிக்கப்படுவதிலிருந்தும் பாதுகாக்க வேண்டும்.

### 20 குடும்பம் அற்ற சிறுவர்கள்

தமது குடும்பத்திலிருந்து பாதுகாப்பை பெற்றுக்கொள்ளாத எந்தவொரு பிள்ளைக்கும், தனது மதம், கலாச்சாரம், மொழி மற்றும் வாழ்க்கையின் பிற அம்சங்களுக்கு மதிப்பளிக்கும் நபர்களிடமிருந்து பாதுகாப்பு பெறவும், வளரவும் உரிமை உண்டு

### 21 தத்தெடுக்கப்படும் சிறுவர்கள்

குழந்தைகளை தத்தெடுக்கும்போது [adoption], மிகவும் முக்கியமான விடயம் என்னவென்றால், குழந்தையின் அதிகபட்ச நலனே ஆகும். உதாரணம்: குழந்தை இருக்கும் நாட்டில் பாதுகாப்பாகப் பராமரிக்க முடியாவிட்டால், வேறு ஒரு நாட்டில் உள்ள குடும்பத்திற்கு அந்தக் குழந்தையைத் தத்தெடுத்து வளர்க்க முடியும்.

### 22 இடம் பெயர்ந்த சிறுவர்கள்

தமது நாட்டிலிருந்து வேறு நாட்டிற்கு அகதிகளாக வரும் சிறுவர்களுக்குத் தேவையான உதவியும் பாதுகாப்பும் வழங்கப்பட வேண்டும். அத்துடன், அவர்கள் வந்திருக்கும் நாட்டின் சிறுவர்களுக்கு வழங்கப்படும் சமமான உரிமைள் அவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

### 23 மாற்றுத்திறன் கொண்ட சிறுவர்கள்

மாற்றுத்திறன் கொண்ட ஒவ்வொரு சிறுவருக்கும், சமூகத்தில் உள்ள மற்றைய அனைத்து சிறுவர்ளைப் போலவே, தமது வாழ்க்கையைச் சிறப்பாக வாழ இடமளிக்க வேண்டும். அவர்கள் சுயமாகவும், தமது சமூகத்திற்குள் சுறுசுறுப்பாகவும் இருப்பதற்கு உள்ள தடைகளை அரசாங்கங்கள் அகற்ற வேண்டும்.

### 24 சுகாதாரம், நீர், உணவு, சுற்றுச்சூழல்

சிறுவர்களுக்கு அவசியமான மிகச் சிறந்த சுகாதார வசதிகளைப் பெற்றுக்கொள்ளவும், குடிப்பதற்குச் சுத்தமான நீர், சத்தான உணவு, மற்றும் வாழ்வதற்குத் தூய்மையான, பாதுகாப்பான சுற்றுச்சூழலைப் பெற்றுக்கொள்ளவும் உரிமை உண்டு.
அப்படி நல்ல ஆரோக்கியத்துடன் எப்படி இருக்க முடியும் என்பது பற்றிய தகவல்கள் ஒவ்வொரு சிறுவருக்கும் மற்றும் பெரியவருக்கும் எளிதாகக் கிடைக்க வேண்டும்.

### 25 ஒரு பிள்ளை நிறுவனப்படுத்தப்பட்டிருக்கும்போது, அது குறித்து மீள்பரிசீலனை செய்தல்

வீட்டிற்கு வெளியே உள்ள ஒரு இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பிள்ளையின் பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்தும் , அனைத்தும் நன்றாக அமைந்துள்ளதா மற்றும் அந்தக் பிள்ளைக்கு இன்னமும் அதுவே சிறந்த இடம்தானா என்பதை தெரிந்து கொள்ள , அவர்களின் நிலைமை தொடர்ந்து சரிபார்க்கப் பட வேண்டும்.

### 26 சமூக மற்றும் பொருளாதார உதவிகள்

ஏழைக் குடும்பங்களின் சிறுவர்களுக்கு உதவுவதற்காக அரசாங்கம் பணம் அல்லது வேறு உதவிகளை வழங்க வேண்டும்.





## 27 உணவு, உடை மற்றும் பாதுகாப்பான வீடு

சிறுவர்களுக்கு ஆடைகள் மற்றும் வாழ்வதற்கான பாதுகாப்பான இடம் ஆகியன இருக்க வேண்டும். இந்த வசதிகள் இல்லாத/வழங்க முடியாத குடும்பங்களின் சிறுவர்களுக்கு அரசாங்கம் உதவி வழங்க வேண்டும்.

## 28 கல்விக்கான உரிமை

ஒவ்வொரு சிறுவருக்கும் கல்வி கற்க உரிமை உண்டு. ஆரம்பக் கல்வி இலவசமாக வழங்கப்பட வேண்டும். இடைநிலைக் கல்வி மற்றும் உயர்கல்வி வரையிலும் கல்வி கற்பதற்கு ஒவ்வொரு சிறுவருக்கும் வாய்ப்பு அமைத்து கொடுக்க வேண்டும். சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லக்கூடிய அதிகபட்ச காலம் வரை செல்ல ஊக்குவிக்கப்பட வேண்டும். பாடசாலையில் சிறுவர்களை நெறிப்படுத்தும்போது சிறுவர் உரிமைகளை மதிக்க வேண்டும், அத்துடன் வன்முறையைப் பயன்படுத்தக் கூடாது.

## 29 கல்வியின் நோக்கம்

ஒரு பிள்ளை பெற்றுக்கொள்ளும் கல்வி, அவர்களின் திறமைகளை வளர்க்க கூடியதாக அமைய வேண்டும். அதேபோல் மற்றவர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிக்கவும், மற்றவர்களின் மதங்கள், கலாச்சாரங்களுக்கு மதிப்பளிக்கவும் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். கல்வி மூலம் அமைதியாக வாழவும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும்.



## 30 சிறுபான்மையினக் குழுக்களைச் சேர்ந்த சிறுவர்களின் கலாசாரம், மொழி மற்றும் மதம்

சிறுவர்களுக்குத் தமது சொந்த மொழி, கலாசாரம் மற்றும் மதத்தைப் பயன்படுத்த உரிமை உண்டு. உதாரணம்: ஒரு பிள்ளை தனது தாய்மொழி பேசப்படும் நாட்டில் வாழாவிட்டாலும், எந்த நாட்டிலும் அதைப் பேசுவதற்கு உரிமை உண்டு.

## 31 விளையாட, சுதந்திரமாக இருக்க உரிமை

ஒவ்வொரு சிறுவருக்கும் ஓய்வெடுக்க, விளையாட, நடனமாட, பாடுவதற்கு, சித்திரங்கள் வரைய, எழுத, வாசிக்க உரிமை உண்டு.

## 32 தீங்கு விளைவிக்கும் வேலைகளில் இருந்து பாதுகாப்பு

தமது கல்வி, சுகாதாரம் அல்லது வளர்ச்சிக்குத் தீங்கு விளைவிக்கும் வேலைகளில் இருந்து பாதுகாக்கப்பட சிறுவர்களுக்கு உரிமை உண்டு. இலங்கையில் 16 வயதுக்குக் குறைந்த சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது சட்டவிரோதமானது. இலங்கையில் 16 தொடக்கம் 18 வயதுக்கு இடைப்பட்ட ஒரு சிறுவனோ சிறுமியோ வேலை செய்வாராயின், அவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கவும், நியாயமான ஊதியத்தைப் பெறவும் உரிமை உண்டு.

## 33 தீங்கு விளைவிக்கும் போதைப்பொருட்களிலிருந்து பாதுகாப்பு

தீங்கு விளைவிக்கும் போதைப்பொருட்களைப் பயன்படுத்த, தயாரிக்க, கடத்த அல்லது விற்பனை செய்வதிலிருந்து சிறுவர்களைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

## 34 பாலியல் துஷ்பிரயோகத்தில் இருந்து பாதுகாப்பு

அரசாங்கமானது, சிறுவர்களை எந்தவொரு பாலியல் சுரண்டல் (பாலியல் இலாபம் பெறுதல்) மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்களில் இருந்தும் பாதுகாக்க வேண்டும். பணம் கொடுத்து சிறுவர்களை பாலியல் ரீதியாக நடந்துகொள்ள வற்புறுத்தும் நபர்கள் மற்றும் சிறுவர்களைப் பயன்படுத்தி பாலியல் படங்கள் அல்லது திரைப்படங்களை உருவாக்குவதும் இதில் அடங்கும்.

## 35 விற்பனை மற்றும் ஆட்கடத்தலில் இருந்து பாதுகாப்பு

அரசாங்கமானது ,சிறுவர்கள் கடத்தப்படுதல், விற்பனை செய்தல் மற்றும் ஆட்கடத்தல் நாட்டிற்குள் அல்லது நாட்டிற்கு வெளியே

ஆகியவற்றிலிருந்து பாதுகாக்க வேண்டும்.

### 36 சுரண்டல்களிலிருந்து பாதுகாப்பு

இங்கு குறிப்பிடப்படாத மற்ற அனைத்து வகையான சுரண்டல்களிலிருந்தும் (சிறுவர்களிடமிருந்து தவறான ஆதாயம் பெறுவதிலிருந்து) பாதுகாக்கவும் சிறுவர்களுக்கு உரிமை உள்ளது.

### 37 தடுப்புக் காவலில் உள்ள சிறுவர்கள

சட்டத்தை மீறியதாகக் குற்றம் சாட்டப்பட்ட சிறுவர்களை கொலை செய்வது, சித்திரவதை செய்வது, கொடூரமாக நடத்துவது, நிரந்தரமாகச் சிறைப்படுத்துவது அல்லது பெரியவர்களுடன் சிறைப்படுத்துவது கூடாது.
சிறுவர்களை தடுப்புக் காவலில் உள்ள இல்லத்தில் தங்க வைத்தல் என்பது இறுதி முயற்சியாக, மிகக் குறுகிய காலத்திற்கு மாத்திரமே இருக்க வேண்டும். இத்தகைய சிறுவர்களுக்கு சட்ட உதவி பெற உரிமை உண்டு, மேலும் அவர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களுடன் தொடர்பு கொள்ளவும் முடியும்.

### 38 யுத்தத்தின்போது பாதுகாப்பு

யுத்தம் ஒன்றின்போது சிறுவர்களுக்குப் பாதுகாப்புப் பெறுவதற்கு உரிமை உண்டு. 15 வயதுக்குக் குறைந்த எந்தவொரு பிள்ளையும் இராணுவத்தில் இணைக்கப்படவோ அல்லது மோதலில் பங்குபெறச் செய்யவோ முடியாது.

### 39 யுத்தத்தை எதிர்கொண்ட பிள்ளைகளைச் சமூகத்துடன் இணைத்தல்

சிறுவர்கள் யுத்தத்தினால் காயப்பட்டு, கவனிக்கப்படாமல், மோசமாக நடத்தப்பட்டு அல்லது பாதிக்கப்பட்டிருக்கும்போது, அதிலிருந்து மீண்டு, ஆரோக்கியத்துடனும், மரியாதையுடனும் வாழ்வதற்கு உதவிகளைப் பெற்றுக்கொள்ள அவர்களுக்கு உரிமை உண்டு.

### 40 சட்டத்தை மீறும் சிறுவர்கள்

சட்டத்தை மீறியதாகக் குற்றம் சாட்டப்பட்ட சிறுவர்களுக்குச் சட்ட ரீதியான உதவியும் நியாயமான கவனிப்பும் கிடைப்பதற்கு உரிமை உண்டு. இந்தக் சிறுவர்கள் மீண்டும் நல்ல பிரஜைகளாக சமூகத்துடன் இணைவதற்குத் தேவையான உதவிகளையும் தீர்வுகளையும் வழங்க வேண்டும். தடுப்புக் காவலில் வைத்தல் இறுதி வழிமுறையாக மட்டுமே அமைய வேண்டும்.

### 41 சிறுவர்களுக்கான மிகச் சிறந்த சட்டமே பாவனைக்குரியது.

ஒரு நாட்டின் சட்டங்கள் இந்த சாசனத்தை விடவும் சிறுவர்களின் உரிமைகளைச் சிறப்பாகப் பாதுகாக்கிறதென்றால், சிறுவர்களின் பாதுகாப்பிற்காக அந்தச் சட்டங்களே பயன்படுத்தப்பட வேண்டும்.

### 42 அனைவரும் சிறுவர் உரிமைகளை அறிந்திருக்க வேண்டும்

சிறுவர் உரிமைகள் பற்றி அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும், அத்துடன் அரசாங்கங்கள் இந்த உரிமைகள் குறித்துப் சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் அறிவூட்ட வேண்டும்.

### 43 முதல் 54 வரை – சாசனம் நடைமுறைப்படுத்தப்படும் விதம்

இதன் மூலம் அரசாங்கங்கள், ஐக்கிய நாடுகள் சபை, சிறுவர் உரிமைகள் குழு மற்றும் யுனிசெ.ஃப் உட்பட ஏனைய அமைப்புக்கள், அனைத்து சிறுவர்களும் அவர்களின் சகல உரிமைகளையும் அனுபவிப்பதை உறுதி செய்வதற்காக எவ்வாறு செயல்படுகின்றன என்பது விளக்குகிறது.




1
-18
DEFINITION OF A CHILD
2
NO DISCRIMINATION
3
BEST INTERESTS OF THE CHILD
4
MAKING RIGHTS REAL
5
FAMILY GUIDANCE AS CHILDREN DEVELOP
11
PROTECTION FROM KIDNAPPING
12
RESPECT FOR CHILDREN'S VIEWS
13
SHARING THOUGHTS FREELY
14
FREEDOM OF THOUGHT AND RELIGION
15
SETTING UP OR JOINING GROUPS
21
CHILDREN WHO ARE ADOPTED
22
REFUGEE CHILDREN
23
CHILDREN WITH DISABILITIES
24
HEALTH, WATER, FOOD, ENVIRONMENT
25
REVIEW OF A CHILD'S PLACEMENT
31
REST, PLAY, CULTURE, ARTS
32
PROTECTION FROM HARMFUL WORK
33
PROTECTION FROM HARMFUL DRUGS
34
PROTECTION FROM SEXUAL ABUSE
35
PREVENTION OF SALE AND TRAFFICKING
41
BEST LAW FOR CHILDREN APPLIES
42
EVERYONE MUST KNOW CHILDREN'S RIGHTS
43-54
HOW THE CONVENTION WORKS




# CONVENTION ON THE RIGHTS OF THE CHILD

At UNICEF we believe that every child whoever she is, wherever he lives deserves a childhood, a future, a fair chance.

That's why UNICEF has been there for every child in Sri Lanka day in day out since the 1950s.

For every child, education
For every child, health
For every child, protection
For every child, nutrition
For every child, opportunity


**UNICEF Sri Lanka**
UN Compound
202-204,
Bauddhaloka Mawatha,
Colombo 07, Sri Lanka.
colombo@unicef.org.